T-UN-521

உ

கணபதி துணை.

# அண்ணாமலைசதகம்.

இஃது.

மாம்பாக்கம்.

உபாத்தியாயரென்னும்பெயருள்ள

## திருச்சிற்றம்பலநாவலரால்.

நூதனமாகச்செய்யப்பட்டு.

திருவண்ணாமலையீசுரர்சந்நிதானத்தில்

ஷ - ஆலயத்துக்குத்தருமகர்த்தரும்

வேட்டைவனசமஸ்தானாதிபதியவர்களுமாகிய

ம-ா-ா-ஸ்ரீ.

அருணாசலவசந்தகிருஷ்ணதாண்டவராயவசந்தரா

ய பண்டாரியாரவர்கள் சமூகத்திலரங்கேற்றி

## தி-அ-சிவானந்தசுவாமிகள்

கருத்தின்படி.

மண்ணிப்பாக்கம்

## சபாபதிமுதலியாரவர்களால்

சைதாப்பேட்டை

## வீரபத்திரசெட்டியாரவர்கள்

கம்பெனியாரது

லக்ஷுமிவிலாசஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

கலியாப்த௫ஙூ - சகாப்தம்௲ல்-பரிதாபி௵ ஆடி௴.

இந்தபுஸ்தகம் வேண்டியவர்கள் திருவண்ணாமலைச்சமஸ்தானம்-பேஷ்காரிடத்தில்விலைக்குவாங்கிக்கொள்ளலாம்.

## சாற்றுகவிகள்.

இஃது.

## தி-அ-சிவாநந்தசுவாமிகள்பாடியது

பொன்வரையிளஞ்ஞாறு முடியின்மிசையிரவிப் பொலித்தெனக்கிரவுததி, புவியேந்துபாந்தண்மிசைகண்டுயின் மாலொடு பொலன்சிறையனத்தினுருவம், போன்றுமவனிகல்வுழிப் பொருவமர்விலக்கிடப் பொன்மண்ணினுலகூடுரீஇப், பொற்பொடுதழற்பிழம்பானபெயர்நாட்டியிப் புவிமீதப்பதியின்குணபான், மன்னேறு மெய்ப்பொருளாடிருமுனைப்பாடி வளநாட்டவ்வண்ணன்மரபில், வருசிங்கநகரிறைவசந்தனெழினிகர்தலின் வசந்தனெனுமொண்பெயர்மரீஇ, மண்ணிடைச்சதகமொன் றுரையெனப்பழமறையின்வழி யாவுமோர்ந்ததினுறும்; வகையாகவாழிகோ வற்சிறப்பாட்டுவிதி வகைவணங்கற்கிரங்கன், மின்னுருமருணையிற்றீர்த்தவகைபாழிவகை விதிமாத்தவபிடேகமும், வெண்ணிறவிபூதிமறையவர்கருமம் வேட்டல்பெயர் விதியரசர்முறைவன்றனை, விரிதிருமுனைப்பாடி நாட்டளவுதெய்விகன்மேவுசுபமுடிமாலைபேர், மேதினியினுறும்வகைமணத்தொகைமனைப்பெயரு மெய்ப்பொருளுநரசிங்கருந், தன்னன்பு குலசேகரப்பேயர்கொ ளாதியாந் தொண்டர்களுதித்த வகையுஞ், சொன்ன நூற்கணிபாக வைத்துலகிலியாவருந் தூய்நெறிச்சென்று வீடு, தோய்வுறற்கண்ணு மலைசதகமென்றிது தொகுத்தானிவ் வகிலமீது, தோன்றுமாம்பாக்கத் துபாத்தியாயென்றுபெயர் சொற்றருங்கவிஞர்வேந்தே.......................................................*

திருவெண்ணைநல்லூர்.

## இராசப்பவுபாத்தியாயர்பாடியது

பணிமுடிசுமக்குமெழுபாரளந்தவனுமுயர் பதுமாதனத்தினனும், பன்றியனமாய்நிலமகழ்ந் துவிண்மீதிற் பறந்துநாடற்கருமையாய்; அணியிதயதொண்டர்நினை யாமுனம்வந்தவர வாவினதருட் கெளிமையா, யழல்வடிவமாயெழுந் தெங்கும்ப்ரகாசிக்கு மண்ணுமலைத்தேவர்மேல், மணிதருவளைக்குலமொலிக்கும்பணைக்கணுறு வாளைகளெழுந்துவானின், வரநதியுழக்கிவருசிங்கருகராளிபுகழ் மன்னியவசந்தராயன், திணிபுயத்தரசரோறறிஞர்குலசேகரன் றிறமிகுஞ் சதகமது நீ, செப்புதியெனச்சிந்தை யன்புகூர்ந்தருளினன் சிற்றம்பலக் கவிஞனே.............................................*

காஞ்சிபுரம்.

## மாசிலாமணிமுதலியாரால்

## இயற்றப்பட்டது.

(வெண்பா.)

வான்பரவுமண்ணு மலைசதகமென்றொருநூல்... - ... *
தேன்பரவுதீம்பாலிற்செய்தளித்தான் - மான்பரவிச். *
சேர்விழியார்மாம்பாக்கஞ் சிற்றம்பலவாணன்.........*
சீர்வசந்தராயனையுஞ் சேர்த்து........................*

சாற்றுகவிகள் - முற்றிற்று.

இஃது.

சென்னப்பட்டணம் முத்தியாலுபேட்டையில் ஸ்தாபித்திருக்கும் சைதாப்பேட்டை, வீரபத்திரசெட்டியாரவர்கள், கம்பேனியாரது, லக்ஷுமிவிலாச அச்சுக்கூடத்திற் கார்றோடை இலட்சுமண முதலியாரால் நிறைவேறியது.

உ

திருச்சிற்றம்பலம்.

# அண்ணாமலைசதகம்

## விநாயகன்காப்பு.

அண்டமனைத்தும்பரவு - மண்ணாமலைசதக.................... *
மொண்டமிழாற்பேதையே னோதவே - தொண்டர்பணிந் . *
தெண்ணவரந்தருநல்யானை திறைக்கொண்டருண்முக் ....... *
கண்ணவரந்தருந்தாள் காப்பு................................ *

## (நூற் பெயர்.)

மன்னுதிருவண்ணா - மலைசதகமென்றும்பேர்.......... *
பின்னுமொருநாமம் பேசுவாம் - இந்நிலத்திற்....... *
றங்குபுகழ்வசந்த - ராயசதகமென்று...... ............ *
மெங்குந் துதிப்ப தாமே.................................. *

உ

கடவுள் துணை.

# அண்ணாமலைச்சதகம்.

## கடவுள்வாழ்த்து.

கார்கொண்டதிருமேனிசெந்தாமரைக்கணன்கமலாலயத்தெண்கணன், காணரியபேரொளிச்சுடராகியண்டகடாகமூடுருவினின்ற, வேர்கொண்டதிருவுருவ மருவுருவமாகியுல கெங்கும் வியாபியாகி, யெல்லாவுருக்கடோறுமுயிராகியவ்வுயிர்க்கின்பவாநந்தமாகி; பார்கொண்டதூலசூக்குமமாகியழியாத பரசத்தியிடமுமாகிப், பஞ்சகிர்த்தியமும்புரிந்தருள் சுரந்தெழும்பரசிவ மகாலிங்கமே, யார்கொண்ட மலைவளச்சிங்கபுரியாசுசெய் தருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே......(க)

(திருக்கோவலூர் ஸ்தலப்பெருமை.)

கருணாகரக்குகமுனிக்காகவேமுனங் கைலாயகிரியின் முருகன், ணகவேல்விடுக்கவந் தூன்றலாலேதிருக் கையில்வே லூராகுமெய்ப், பொருணையனூரவதரித்ததல மௌவையார் புகலும்வெண்பாவினுக் காய்ப், பொங்குபானெய்வந்தபெண்ணைநதிசூழ்தலம் பொன்மாரி பொழியுந்தலம், வருமாவருட்பெரிய நாயகியும்வீரட்ட மாதேவர் வாழுந்தலம், மாதவக்குக முனிமகந்தனிற்றெய்வீக மன்னனவதாரத்தலம், அருணாசலக்கிருஷ்ணதாண்டவவசந்தவா ணதகைவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத் தேவனே........................................(உ)

(அபிஷேகவிதிகூறியது.)

சுத்தசலமபிடேகநல்லெண்ணெயரிசிமாத் தூண்மஞ்சனெல்லிமுள்ளி, தூபஞ்சகௌவியமாவினெய்பாறயிர்ச் சுவையானபஞ்சாமிர்தம், உத்தபலமாக்கதலிமாதளையதெலுமிச்சை யோங்குதமரத்தைநார்த்தை, யொண்கனிச்சுளைகுளஞ்சித்தேன்றிரட்டுபாலுபர்கருப்பஞ்சாறுடன், மெத்துமிளநீரன்னம்வில்வநீர்தபனநீர்மிளிர்பொன்னிரத்னோதகம்; மென்பசுங்கற்பூர நன்புனுகு சந்தனம் விளங்குதாராபிடேகம், அத்தனிற்கித்தகைய வபிஷேகமேபுரிந் தருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே........................................(ங)

(அருள்பெறுமாறெங்ஙனெனவிரங்கல்.)

தருமலரெடுத்துனைப்பூசைபுரிவோமெனிற்றண்மலர்த்தேனருந்தச், சுரும்பெனுமுக்கை யவிழ்கின் றபோதுவீழ் தனிவண்டெச்சிலாம், விரிபுனலெடுத்துனைக் காட்டுவோமென்னிலோ மேயுமண்டேமாமை, மீனத்தையுண்டிருந் துலவலாலந்தநீர் மிகுதியுந்தானெச்சிலாந், தெரிமறைபிருக்காதி மூவர்தேவாரங்கடிருவாசகத்துதிகளைச், செப்பவமெனிலே துதிகள் செய்நாக்குமெச்சிலென் செய்துனக்காளாவனே, அருள்பரமதேசிகக் குகைநமசிவாயர்திருவருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.................. .............. ......(௪)

(திருவண்ணாமலை தீர்த்தத்தொகைவகைகூறியது.)

இந்திரன்றீர்த்தமோ டக்கினிதீர்த்தமா மெமதீர்த்த நிருதிதீர்த்த, மியல்வருணதீர்த்தமுயர் வாயுதீர்த்தம்வடக் கெழிலார்ந்தும்பர தீர்த்தம், நந்தலறுமீசானியன் றீர்த்த மிறைவியுண்ணாமுலைத்தீர்த்தமரிய, நற்சிங்கதீர்த்தமாணிக்கவாசகதீர்த்த நாடருமபிரமதீர்த்த; முந்துசிவதீர்த்தமரி மைந்துசக்கரதீர்த்த மோய்ப்பெருங்கட்க தீர்த்த, மூன்னூற்றுமேலுமறு பதுதீர்த்தமேவுதல மொழியினினருணாசலம், ஐந்துபூதத்தலத்தொருதலமதென்பர்கா ணருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிறறுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.......... .............. ......... .................(௫)

(மூவர்பாடல்பெற்ற சிவஸ்தலமிருக்குமிடங் கூறியது.)

காவிரியின்வடகரையி லறுபத்துமூன றுபதி காணட்டுந்தென்கரையினிற், கருதுமொருநூறுமிருபத்தேழான்பதி கணக்கிலீழத்திரண்டு, மேவியபாண்டிபதி நான்குமலைநாடொன்று கோங்கிலேழ்நடுநாட்டினிற், கூறுமிருபத்திரண் டாந்தொண்டைநாட்டிற் குறிக்கிலெண்ணான் குதலமாம், பூவிரவுதுளுவத்திலொன் றுவடதிசையைந்து புகலிலிருநூறுமெழுபான், புணருமேனுதல மூவர்பாடியதலமு புண்ணியத்தலமென்பர்காண், ஆவிதொறுநின்றுணை வளித்திடும் பரமனை யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிறறுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.................. ..... ......(௬)

(மாசந்தோறு மபிடேக வகைகூறியது.)

வருடாதிசித்திரைத்திங்கள்பூரணைநாண் மருக்கொழுந் தபிடேகமாம், வையாசிசந்தன மதானியில்பலாப்பழமுமாங்கனிக் கதலிக்கனி, கருதாடிசர்க்கரையதாவணியிலதிரசங் காணும்புரட்டாசியிற், காச்சியதிரட்டுபாலைப்பசிக்கன்னமாங் கார்த்திகைத் தீபார்ச்சனைத், திருமார்கழிக்குநெய் தைத்தேன்குடங்கிருதஞ் சேர்ந்தகம்பள மீன்மதித், தீந்தயிர்ப்பரமனுக் காட்டல்விதிபூரணைத் திதிதொறுமாசபூசை, யரிதாயறிந்துனக்கபிஷேகமதுபுரிந்தருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே*

(விபூதிதரிக்கும்விதி.)

நித்தலும்வைதீக ராதிமறையோர்கட்கு நீர்கொடுகுழைத்து நீற்றை; நெற்றியிற்பன்னிரண் டங்குலத்தளவதா நேராய்த்தரித்தணியாஞ், சித்திரமிழைத்தசிங் காதனத்தரசுபுரி செங்கைவேலரசருக்குத், திருநீற்றைபொன்பதங்குலநீளமாநுதற் சேர்த்தணிதலே விதியதாஞ், சுத்தமுழுவசியர்க்கு நாலிரண்டங்குலஞ் சூத்திரற்கேழங்குலந், தோகையர்தமக்குநாலங்குலத்தளவெனச் சொன்னதே மகுடாகமம், அத்ரதேவாங்குலந் திரிசூலவடிவணித லருள்பெறுவசந்தராயர் அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.

(பிராமணர்சட்கருமாதி விதிகூறியது-)

வேதமதுதானோதன் மற்றொருவருக்கோதிவித்தருன்யாகஞ்செயல், விதியோடுமற்றொருவருக்குநல்யாகஞ்செய்வித்தலோடீதலேற்றல், ஒருமிவைசட்கரு மமாகவன்னியமொன் றுனாத்தகாருகபத்தியும், ஒன்றுசுடர்தெக்ஷணாக்கினியொன்றதிவைமூன்று முறமூந்திரேதாக்கினி, கேதமறுமியல்பிரமசாரிகிரகத்தன் கிளர்ந்தவானப்பிரத்தன், கேடில்சன்னியாசியிவையாச்சிரமநான்கதாங் கீதவேதங்களுன்காம், ஆதிவருணர்க்கென வியாசமுனிசெய்தவிதி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே..................................................................

(அருக்கியங்கொடுக்குங்காலபலன்கூறியது.)

இரவிமேலானைபைந்துகடிகையதுஷிக்காலமேத்துவான்மீனின ளெங்கும்விளங்குமக்காலையிலருக்கிய மிறைத்திடுதல்பூரணபல ருவுமிநுபானமூகன்னலருணோதயம்வானிலகுதாரகையெலா, ங்கியுமமுங்காதிருக்கவர்ககியமீதன் மத்திமப்பலனுகுமாம்,உலா யிருபானெட்டிவினனுதயமும்வொளியொழிந்தருககியமதமமா,மு தயமேலர்க்கியம் வந்திமைதுனபலனுனாக்குமறையோர்க்கென்பர் காண். அருணகிரிநாதர்புகழுயிலவன்றுதைமேய யருள்பெறு வசந்தராயர்; அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.......................................................(௯)

{ அஷ்டவிவாகங்களில் பிராமணர்க்கிவையென்பதும்
பிராமணர் நித்தியகருமவிதியுங் கூறியது. }

கருதுபிரமந்தேவதம்பிரசாபத்தியங்காணமகிழாரூடமாங், கந்திருவமசுரமுமிராக்கதம்பைசாசகலியாணமோரெட்டினிற், பரவுமுதனுன்கும் பொருந்திமானினிகருப் பாதானமாதியான. பதினாறுமாச்சிரம நான்குசட்கருமமும் பழகுமுத்தழலும்வேள்வி, யிரவியுதியாமூன்னு ஷிக்காலநீராடி யேன்றதிரிசந்திகால, மிருஙகயாலர்க்கியம் பூஜையெளபாசன மியம்புகாயத்திரிசபம், அரியநூல்வேதத்தியானமறையோர்செய்கை யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.........(௰)

# அண்ணாமலைச்சதகம்

(இருபத்தொரு யாகத்தின்பெயர்கூறியது.)

ஓதரியவக்கினிஷ்டோமமத்யாக்கினிட்டோமமக்கிரகாயணி, யுத்தியஞ்சோடசிவாசிபேயம்மாக்னி யோத்திரஞ்சதுர்மாசியந், திரிலாவத்தோரியாமமதிராத்திரஞ்செப்புமக்கினியதேயந், தெரிசபூரணமாச நிருடபசுபந்தஞ் சிராவணிசவுத்ராவணி; மேதலைகயசத்திரிசிரார்த்தமோடட்டகை விளங்குமாக்ராயணமுடன், மேவுயார்வணமாசு வயசுவிருபத்தொன்றும்வேதநவில்யாகங்களாம், ஆதிவேள்வியில்வந்தவமிசநரசிங்கவே ளருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே......(௧௨)

(அரசாளவேண்டுந்தன்மைகூறியது)

மலையரண்காடரண்மதிலரணீரரண்மருவுமிந்நான்கரணமு, மந்திரிகடளகர்த்தர்குடிபடையுமுடையராய் வலியசதுரங்கசேனை, நிலையுடையராயெளியரெளிதினிற்கண்டுகொள நேரிடுங்கருணையுளராய், நிலமுழுங்குடிகள்பாலாறிலொருகடமையின் விதிகொண்டு தனதுநாட்டிற், கலகமிடுவோர்களைக் குலைகளவினோர்களைக்கன துஷ்டமிருகங்களைக், கண்டித்துமனுநூலறிந்துசெங்கோலின்முறை காத்திடுநலரசாட்சிகாண், அலைபுனற்பாண்டிநாடாண்டசொக்கேசனே யருள்பெறுவசந்தராயர்; அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்[illegible]மலைத்தேவனே..................................(௧௩)

(அரசர்கட்குறுதிசுற்றங்கூறல்.)

மந்திரியர்கருமாதிகாரர்கடைகாப்போர்கண் மருவுநகர் மாக்கள்
ற, மலைபடைத்தலைவரோடிவுளியேறிடுபறவர்மதயானை வீரரொ
மர், சந்ததமுமரசருக்குறுதுணைவராமியல்புதவராதவந்தணாளர்,
த்தமுறுநட்பாளரொடுமடைத்தொழிலர்நோய்தனையறிந்தவிழ்த
மீயும், புந்தியின்மருத்துவக்கலைஞருநிமித்திகப்புலவரிவரைவர்களுமெய்; போதுமரசர்க்குறுதியாகின்றசுற்றமிது புகலுமனுநீதிகண்டாய், அந்திசந்தியுமூச்சிவந்தனம்பூசைபுரி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே..................................(௧௪)

(திருமுனைப்பாடிநாட்டுப்பிரமாணங்கூறியது.)

மன்னியல்பசும்புரவி யேறியொருசணமதில் வலம்வருபுவியைநீயே, மாமுடிகவித்தாள்கவென்றுமூவேந்தரும் வாய்மலர்ந்தருளவாங்கே; மின்னுறுகுணக்குக்கடற்கரைவரைக்குமிகுமேவுமலர்ச்சோலைதெற்கு, விளங்குதிருவாத்துறைவதிட்டகுடி வெள்ளாறுமேற்றிசைக்கொல்லிமலையாந், தென்னியல்வடக்குப் புணர்ப்பருங்கடியாறுசெப்புமிந்நான்கெல்லையுட், டிருமுனைப்பாடிநாடதுசதுர்முடிபெற்ற தெய்வீகமன்னனாண்ட, அந்நிலையில்சிங்கபுரி நன்னிலத்தரசுபுரி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே..................................(௧௫)

(தெய்வீகராசன்மங்களங்கூறியது.)

பணிவெள்ளிசெம்பொனபராஞ்சிமணிமரகதப்பச்சைநிசழ்வைடூ
ரியம், பவளமாணிக்ககோமேதகங்கோமளம்பனிமுத்து புஷ்பரா
கம், மணியுந்துமாபரணமாலையும் பன்னிருவகைத்தெய்வமலர் மா
லையும், மார்பத்தணிந்துமாமுடி சூடியிலகுபசுவான் புரவியூர்ந்து
வேள்வி, தணியுள்ளெழுந்துவந் துயர்திருமுனைப்பாடி நாடாந்தி
ருக்கோவலூர், நல்லசிங்காசனத்தெய்வீகராசனு நரசிங்க முனையர்
வாழ்க, அணிவெள்ளிகோத்ரகுல தீபமென வந்தநிதி யருள்பெறுவ
சந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாம
லைத்தேவனே............................................(௧௬)

(தெய்வீகராசன்சதுர்முடிசிறப்புக்கூறியது.)

பன்னிரண்டலர்மாலை புனைகின் றதிண்புய பராக்ரமத்தெய்வீகநீ,
படையெடுத்தமர்புரிய வேண்டாமெனச்சொலிப் பாராளும்வேந்த
ர்காண, மன்னரோர்மூவரும் மல்லுயித்தியமேற்று மல்லாடலுக்கி
ளைத்து, மற்போர்புரிந்திடற் கிவனொருவனரசிங்கமாவீரனெனவிய
ந்து, தென்னனுஞ்சோழனுஞ்சேரனுந்தற்தமுடி செல்வமுடியென்
றுசூட்டத், திருமுடியுடன்மூன் றுமொரு முடிச்சதுர்முடித்தெய்
விகுலத்துதித்த, அன்னமெனமதிவளரு நீபுணகெம்பீர துரையரு
ள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்
ணாமலைத்தேவனே............................................(௧௭)

(தெய்வீகராசன்பன்னிரண்மாலைவகைகூறியது.)

கொம்பலர்பசும்பொனேர் கொன்றைபுனை மாதளங்கூவிளங்குமி
ழ்சண்பகங், குலவுபரிமளவகுள்மலர் துளவுகமலமலர் கோங்குசெங்
குவளைவாகை, தும்பையார்வேம்புபன்னிருமாலை கொண்டபுயசுந்த
ரவிலாசமார்பன், தூயசதுர்முடிமகுட சேகரன்மும்மன்னர் சொ
ந்த சம்பந்தமுடையோன், கம்பமதமுத்தலைக்காரண்டனைச் சயங்க
ண்டவேல்கொண்டதிறலோன், காசினியை யெழுநூறுவயதாண்ட
தெய்விகக்காவலன்மகிமைகண்டாய், அம்புயமலர்ந்தமுக கெம்பீர
ராசர்புகழருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமு
லைக்குரிய வண்ணாமலைத்தேவனே............................(௧௮)

(மலையரையன்தெய்வீகனுயவதரித்தமைகூறியது)

வரையில்புகழ்கைலையிற் சிவனுமையுமருவுமக்காலமலையரைய
னோர்நாட், கடவுளுக்கறிவியாதேபுகப் பரமனக்காதன் மாதுலனை
நோக்கித், தரையின்மானிட னுச்சனிப்பையென் றுரைசெயத்தாழ்ந்
தவன்சோர்ந்துநிற்குந், தருணத்திலுமையெழுந்தன்மாமனார்ப்பிற
விசார்வனோவென்றிறைஞ்சி, யுரைசெயச்சாபந் தவிர்க்க வேண்டுவ
தாலிவ்வுலகத்திலனேகயிற்றி, லுதியாமல்வேள்வியிலுதித்தவனியாள்
கவென்றோதிடக்குகமுனிமகத், தனயனெனவந்ததெய்விக குலோ
த்துங்கதுரையருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்
ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........................(௧௯)

(தெய்வீகராசன்மனைவிகள்பெயர்கூறியது.)

சோரன்பயந்தபதுமாவதி யெனும்பெயர்த்தெரிவையும்பாண்டி யன்மகட்,டினமால்பொருந்துகாஞ்சனமாலையென்னுமொருதேவி யுஞ்சோழனீன்ற, பேரன்புகொண்ட சண்பகமாலையென்கின்றபே தையுமணம்புரிந்த, பெண்ணையாற்றங்கரைக்கோவறெய்வீக னருள் பெருமானிலங்குநாவ, லூரன்றுதித்திருத் தொண்டத்தொகைக்குள் ளுமாபதியுருக்கலந்து, வுற்றவறுபத்துமூவரிலொருவராகின்றவோ ங்குநரசிங்முனையர், ஆனவங்கிஷகுலகுபேரனிகர் செல்வதுரையருள் பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண் ணாமலைத்தேவனே..........................................(௨௰)

சத்தபுரிராசகுமாரிகளைத்தெய்வீகராசன்மணஞ்செய்தனைகூறியது

காசிராசன்மகளனப்பிரபைதன்னையுங் காஞ்சிபேரிகதனீன்ற, கம லாவதிப்பெண்ணையோத்தியிற்சிசுருமன் கன்னியாங் கனகையினையும், மாசிலவந்தியாபரிவிசாலாக்கன்மகிழ்ந்தருள்கலாவதியினை, மன்னு ந்துவாரகைச்சந்த்ரவருமன்றரு மடந்தையுற்பலமாலையுந், தேசுவட மதுரையம் போசவிசையாவருமர்செல்விகமலக்கண்ணியைச், செ ல்வபுரி மாயைமா சேனன்பயந்தமதி சேர்ந்தவுற்பலநயனியை, ஆ சையொடுவேட்டதெய்விககுலோத்துங்கதுரை யருள்பெறு வசந்த ராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தே வனே..........................................(௨௰௧)

(அங்கவைசங்கவை கலியாணங்கூறியது.)

சிங்களமெனுந் தேயமுழுதாளுமன்னன் சிறந்தபேர்பாரிசாளன் செய்கவப்பயனுற் பிறந்தநற் குணமான சிறுவியங்கவைசங்கவை, மங்கையர்களிருவரை வளர்த்தெடுத்தெளவையார் மாமுகக்கணபதி கையான், மணவோலையெழுதிமும் மன்னரைக்கோவலூர் வரவழை த்தறுகிடற்குத், தங்கியபனந்துண்ட மரமாகியேடபழந் தாநதிட்பெ ண்ணைதெய்பா, ரூன்வரப்பாடியப் பெண்களைத்தெய்விகத்தலைவன் மணம்புரியவே, அங்குதவுமெளவைதொழு மைங்கரன்றந்தையேய ருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவ ண்ணாமலைத்தேவனே..........................................(௨௰௨)

(மெய்ப்பொருணாயனார்சரிதைகூறியது.)

செப்பருந்தெய்வீக மன்னவன்றென்னவன் செல்விகாஞ்சனமா லையைத், திருமணஞ்செய்தவளை மருவிப்பயந்ததொரு சிறுவர்மெ ய்ப்பொருணாயனார்க். கொப்பறுபசும்புரவியூர்ந்துமூன் வட்டம் வந் திற்றநடுநாடுதன்னி, லொத்தவிந்திரதிசை யினைத்தங்களெல்லாமுவ ந்தரசுபுரிகுவாயென்; திப்பெருங்கோவலின்மணிமுடிதரித்திட வி ருந்தமெய்ப்பொருணாயனார், நன்றசந்ததியெலாநத்தமன்னவரொடு திருந்திடுக்குடிகள்கணடாய், அப்பெரியமெய்ப்பொருளி னற்குல ம்விளங்கவிந் தருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண் ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே..........................................(௨௰௩)

(நரசிங்கமுனையர்சரிதைகூறியது.)

வந்துலகில்புகழ்கொண்டதெய்வீகமன்னனெழின் மலையமான்றந்த
பதுமா,வதிமாதினைப்புணர்ந்தரிதாய்ப்பயந்ததொருமைந்தனரசிங்
கமுனையற், இந்தநடுநாடெனுந்திருமுனைப்பாடிநாட்டெல்லைக்குண்
மலைமன்னனு, யிருவென்றுமுடிசூட்டிவைத்தபடியாலதற் கேய்ந்த
நரசிங்கமுனையர், சந்ததியில்வந்தவர்கள் மலையமன்னென்று பெயர்
சாற்றநெடுமேற்றிசையெலாந், தங்கிபெருங்குடிகளாய் நிறைந்து
மூதுபயிர் தாணிடுஞ்செல்வர்கண்டாய், அந்தநரசிங்கமுனையரையர்
பேரன்புநெறி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயு
ண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே .................. (௨௪)

(குலசேகரநாயனார்சரிதைகூறியது.)

சோழன்பயந்தசண்பகமாலை வதுவையிற்சேர்ந்து தெய்வீகனின்
ற, தோன்றல்குலசேகரன்சுருதியையுணர்ந்தன்ன தாய்முனைப்பாடி
நாட்டில், வாழுமூன்றினிலொன்றுதன்பங்குலற்சித்துவடநாடுபோ
ய்வந்துதன், மனைவியைவிடுத்தே குடந்தையின் குடபான் மணிச்
சோழன்மாளிகைக்கண்; ணூழினெறியாற்றுதிருப்பியைச்சேர்ந்த
திலுதித்தவர்கண்மூப்பனுமான்,றுலகெலாஞ்சொல்லவுஞ்சுருதி மன்
னென்றுபெய ருண்டாயிருப்பர்கண்டாய், ஆழ்தருபெருஞ்சுனைகள்
சூழ்தருஞ்சிம்மபுரி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதி
செயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே ............(௨௫)

(மிருகண்டுமுனிவனாற்காரண்டனவதரித்தமைகூறியது.)

கற்கோட்டையிறைசைநகர் நந்தனவனத்திற் கனத்தமிருகண்டு
முனிவன், கடவுளைப்பூசிக்கமலர்கொண்டுவாவெனக் கடிதினொருபி
ரமசாரி, விற்கோட்டுமலர்கொயச்செல்காலைவஞ்சனை விபாவரியா
க்கிமாதர்; விளையாடலைக்கண்டுதாழ்த்துவரவம்முனி வெகுண்டசுர
னுவாயெனச், சொற்கேட்டுவசுரனுப்பிறையூர்மலைச்சாரமேருன்று
காரண்டனைமுனந், துண்டித்தவாகைவேல்கொண்டபுயதெய்விகத்
தோன்றல்புகழ்செல்லவெளிதோ, அற்கூட்டமணிகண்ட நாதாவி
னோதனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணா
முலைக்குரிய வண்ணாமலைத்தேவனே ........................(௨௬)

(வேளாளர்பெருமைகூறியது.)

தேவாலயந்தோறுந்திருவிழாப்பூசையுஞ்செப்பரியபிரமாலயத்
தெய்வமறையோர்செய்யுந்நித்தனைமுத்தமுந் திரிசந்தியாகங்களும்,
பூவாளுமன்னர்சதுரங்கபலமுதலான பொக்கிஷமிகுஞ்செல்வமும்,
பொன்வெள்ளிதனதானியம்பலசரக்கினுற் பொருளாக்கும்வணிகர்
தொழிலும், கோவாதிசோடசமகாதானதருமமுங் குவலயத்தனைவர்
சுகமும், கோளாறுகொண்டுமும்வேளாளருழுபடைக் கோலதன்
பெருமையன்றோ, ஆவாற்கறந்தபாலபிடேகநேயனே யருள்பெ
றுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணா
மலைத்தேவனே ........................................(௨௭)

(வைசியர் பெருமைகூறியது.)

செம்பொனைக்கல்லினிலுரைத்தாணிவைத்துத் தெளிந்ததன்மாற்றுரைப்பர், திரளுடைமையடகுவைத்தாலுநிலைகண்டுமேற் செட்டாகநிதிகொடுப்பர், பம்புநவரத்நப்பரிட்சைசரிகண்களாற்பார்த்து விலையைப்பணிப்பர், படியுந்தராசுமுண்ணடுநிலைநிதானம் படைத்தநாநிலைமையுடையார், நம்பவருவர்த்தகமுகாந்திரங்கோடிபொன்னம்புவார்வரவுசிலவு- நாடோறுநாடுவார்நாணயமிலார்க்கணுவுநல்கார்கள்வசியர்கண்டா, யம்புவியில்வணிகர்பாற் செம்பொன்வளர்ந்திடுமருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.................................(உஅ)

(நான்குவருணர்க்கறுதொழிற்கூறியது.)

வேதம்படித்தலொருவர்க்கோதிவித்திடுதல் வேள்விசெயல்செய்வித்திடல், வேண்டுவதிரத்தலொருவர்க்கிதலாறுதொழில் வேதியர்க்கானவிதியாம், ஓதருன்வேள்விசெயலீதலிவ்வுலகெலா மோம்பல்படைபயிறல்பொருத, லோராறுமரசர்தொழிலோதலியாகஞ்செயலோங்குபொருளீட்டலீதல்; கோதனைக்காத்தலேருழல்வசிய ராறுதொழிற் குயிலுவத்தொழிலேருழல், கோசாத்தல்காருக வினைத்தொழிற்பொருளீட்டல்குணமாகவீதலாறும், ஆதிசூத்திரர்தொழிற்பகரிலீதாறுகா ணருள்பெறு வசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.........(உகூ)

(சூத்திரமுஞ்சாத்திரமுமவ்வாறெனக் கூறியது.)

செப்புமாபஸ்தம்பசூத்திரமிசைசத்திடுந் திராகியாயினசூத்திரந், திறமானசத்தியாஷாடசூத்திரமறை தெரிந்திட்டபோதாயனம்...* ஒப்பிலாகாத்தியாயினமாசிலாயினமிதோராறுசூத்திரங்களோ...* தருவியாகரணசத்தசாத்திரமொன் றுயர்ந்தசோதிடசாத்திரந்...* தப்பறும்பரதசாத்திரமொன்றுளைப்பருந் தர்க்கசாத்திரமிதொன்று, சாற்றும்வேதாந்தசாத்திரமந்த்ரசாத்திரந்தகுசாத்திரங்களாறும் அப்புலிங்கத்திருவமாகின்றவண்ணலே யருள்பெறுவசந்தராயர் * அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே ( )

(நிலையுள்ளபுகழாளனைக் கூறியது.)

பாலனஞ்செய்துளோராலயமமைத்துளோர் பகர்கோபுரங்கட்டினோர், பத்திமணிமண்டபந்தேர்விமானம்பொன் பதித்தவாகனமமைத்தோர், சாலையனசத்திரம்விக்கிரகரூபஞ் சமைத்துளோரன்னதானந், தடமேரியக்ராரநிலமானியங்கோட்டை தண்சாலையுண்டாக்கினோர், வேலையாயோயாதளித்தவர்கள்பொய்சொலா விரதியர்கள்கவிவாணரான்; மேலாங்கவித்தொங்கல்பெற்றுளோரிவர்களே வீயாதபுகழ்படைத்தோர், ஆலிலைதுயின்றமாலறியாதபரமனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.......................................(ஙக)

(சைவமுறைகூறியது.)

சந்தமலரோனுமா லறியாதபரசிவந் தானேயனாதிசைவஞ், சகலரு
மபணிசிவா லயமேயனாதியாஞ் சைவமடமாகுமது தானெந்தைசி
வலிங்கவுரு வைத்தீண்டியர்ச்சித்தி றைஞ்சிவாழ்மறையோர்கடம்,
மில்லமேயுயராதி சைவமடமாமென் றிசைத்திடுமாகமங்கள், சிந்
தையன்பாகியே மறவாதுசந்ததஞ் சிவசம்ஸ்காராதிகள், செய்யு
மறைவேதியர்க ளில்லமேபூந்திருத் திகழ்மகாசைவமடமாம், ஐந்து
ரதியாந்தலச் சுந்தரச்சைவனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவி
னிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே....... (௰௨)

(பதினாறுபேற்றின்வகைகூறியது.)

நதிவளந்தருபூமி விளைகின்றநெல்லாதி நவதானியப்பெருமையு,
நற்குணத்தொடுசொன்ன சொற்படிநடந்துவருநன்மனையு தன்மக்
களும், மதிவளந்தருகின்ற குறைவிலாக்கல்வியும் மனமிக்கஞானவ
றிவும், வளர்கின்றவிளமையும் மருவிலாவழகும் மகிழ்ச்சிதருநோ
யின்மையும், விதிவளந்தருகின்ற வாணாளுமெய்த்திடமு மெய்த்து
ணிவுமிக்கபுகழும், வெற்றியுநல்லூழு மறுசுவைநுகர்ச்சியும் மேலா
ய்நிறைந்ததனமும், அதிவளந்தருமிதனை பேறுபதினாறென்ப ரருள்
பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்
ணாமலைத்தேவனே.......................................... (௰௩)

(பெண்கொள்ளுமுறைகூறியது.)

தன்னுடையகோத்திரத் தல்லாதகோத்திரத் தகையளாய்ப்பொ
ய்மையில்லளாய்த், தவறிலாதாண்பெண் சகோதரத்தவளாய்தழீ இக்
குலத்திழிவில்லளா, யிற்நிலமிகழ்ந்தபழி யுடையமரபில்லளா யேந்
துவிண்மீன்பறவையா, றெழில்வரைப்பாந்தன்பெய ரில்லளாய்ப்பு
ருடனுக்கிளையளாய் மென்மொழியளாய்ப், பின்னுமுனிவில்லளாய்
நன்னயகுணத்தளாய்ப் பெருமிதம்பிணியில்லளாய்ப், பெருமதிமு
கத்தளாய்ப் பேசுமிப்பெற்றியுள பேதையைமணஞ்செய்யலாம், அ
ன்னையினுமிக்கபே ரன்புடையளாமென்ப ரருள்பெறுவசந்தராயர்,
அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.

(ஸ்ரீலக்ஷணங்கூறியது.)

பம்பைச்சுருட்டைமயி ரில்லாமனுனிமயிர்ப் பகுவாய்ப்பிளப்பி
லாமற்; பற்றுசடையில்லாது கட்டைமயிரோடுசெம் பட்டைமயிரி
ல்லாமலுங், கொம்புபோற்பிறமயிற் குறுகிவரவில்லாது கொத்தா
கமயிரிலாது, கோணலாய்மென்மயிற் புடைகொண்டிலாதுவரி
கொடுவெள்ளைமயிரிலாது, செம்பிறையினெற்றிமேற் பாம்பின்ப
டச்சுழிகள் சேராமலந்நேற்றியுஞ், செவியுமிருகண்களுங் குறுகாம
ன்மூக்கொன்று திகழ்நீளமில்லாமலும், அம்பழுதிலாவிதே பெண்
ணிலக்கணமென்ப ரருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ
யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.............(௰௪)

(புருஷலக்ஷணங்கூறியது.)

நெற்றியிடையோரைந்து கீற்றுமடிப்புறி னிறைகின்றவாயுளுண்டாம், நிரையாகநாலுவரை தோன்றிலெண்பதுவயது நிலையானவாழ்வுமுண்டாம், மற்றுமுக்கீற்று யிருக்கிலறுபான்வருடமட்டினுமகிட்சியுண்டாம், மருவுமிருவரைதோன்றி லாயுளைம்பானேகவரைதோன்றிலாயுண்முப்பான், ஒற்றையஞ்சுழிவலம் புரியாய்நடுத்தலையி லொருமையுடனேயிருந்தா, லுலகமுழுதாளுவா னெற்றியில் வலம்புரித் தோர்சுழியிருக்கிலிறையாம், அற்றுறந்தெழுசோதி நயனப்ரகாசனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே........................(௧௬)

(இ-து.)

விழிதோள்கதுப்பு மூக்கிருமுழந்தாளைந்து மிகநீண்டிருக்கவேண்டும், விரன்மயிர்நகந்தோ னெருங்குபல்லிவையைந்து மெதுவசயிருக்கவேண்டும், ஒழியாதுநீறணியுநெற்றியிருதோண்மார்பு மொண்புறங்கைகள்வயிறு, மோதருங்கைமூல மாகுமிவ்வாறிட முயர்த்தேயிருக்கவேண்டுஞ், செழியுமுள்ளங்கை சீரூதடுமுள்ளங்காற் சிறக்குமுண்ணாக்குநாக்கு, சேருங்கடைக்கணுகிர் கூறுமிடனேழுஞ் சிவந்தேயிருக்கவேண்டும், அழிவிலாநூல்சொலும் புருடலக்ஷணமென்ப ரருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........................................(௧௭)

(இ-து.)

இடைமார்புநெற்றியிம்மூன்றும்விசாலமா யியல்பாயிருக்கவேண்டும், மிருமுழங்காற்கீழு மாண்குறிகிரீவமிவ் விடமிகக்குறுகவேண்டுந், தடையிலாதுந்தியுஞ் சத்துதாள்வாய்மிகத் தாழ்ந்தேயிருக்கவேண்டுந், தங்குகான்மேன்மையா யங்கைமிகவன்மையாய்த் தாணங்கிருக்கவேண்டுங், கொடைதருஞ்செங்கையிற் சங்குசக்கரரேகை கோதண்டமகரரேகை, குலிசமாலிகைரேகை நளினசாமரரேகை கோணுதிருக்கவேண்டும், அடையுமிப்புருடலக்ஷண முடையராசராமருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே ........................................(௧௮)

(விபூதியிடுங்காலங்கூறியது.)

காலையிலெழும்போதும் மலசலம்விடுத்துமிகு கால்சுத்திசெய்தபோதுங், காரிகையொடுங்கூடி நீராடினுந்தரணி காவலரிடம்போகினும், மாலையம்போதினுஞ் சண்டாளர்நிழல்படினு மறுகூடுசென்றுவரினும், மாதகுருதசமேவு மங்கையர்கணிழல்படினு மாபெரியரிடமேயினும், பால்பழம்போசனங் கொண்டபினுமருமலர் பறித்திடினுமாபாதகர், பார்த்திடினுமெவ்வுழி பயப்படினுநன்னூற் படித்திடினுமவிழ்தமுண்ணினு, மாலயம்புகினும் விபூதியிடன்முறையென்ப ரருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..............................(௧௯)

(அறம் ௩௨ கூறியது.)

ஓதுவார்க்குணவீதலாறுசமையத்துளோர்க் கோதனமளித்தலா
வந், தருஞ்சிடத்தறிநாட்ட லுடொறும்பசுவினுக்கு வந்துவாயுறை
கொடுத்தல், காதோலையீந்திடுதல் கண்ணாடிகாட்டலிரு கண்மருந்தி
டல்மடங்கள், கட்டிடுதல்பூஞ்சோலை நட்டிடுதல்பொருளீந்து கன்னி
காதானஞ்செயல்,மாதும்பாகம்புரிய வைத்திடறலைக்கெண்ணை வா
ர்த்திடுதல்சுண்ணமீதல், வருவிலங்கிற்குண வளித்தனுவிதனுதவல் வ
ண்ணானமைத்துவைத்தல், ஆதுலரிருந்திட வறச்சாலைசெய்வித்த ல
ருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய
வண்ணாமலைத்தேவனே.................................(௪௰)

(இ-து.)

செம்பொனளவின்றியே விலைகொடுத்துயிர்காத்தல் சேருஞ்சி
றைச்சோறிடற், றின்பண்டநல்கலறவைச்சோறளித்திட றினந்தோ
றுமையமிடுதல், வெம்புநோய்க்கவிழ்தங் கொடுத்தலேறிடபம் வி
டுத்தன்மக வினைவளர்த்தன், மென்மகப்பால்வார்த்த னன்மகப்பெ
றுவித்தன் மேவுபிறர்துயர்காத்திட, னம்புமறவைப்பிண மடக்கல்
றவைக்காடை நல்குதல்குளங்கெல்லுத, னல்ல தண்ணீர்ப்பந்தல்வை
த்திடுதல் சொற்றிட்டநாலெட்டறங்கண் முன்னம், அம்பிகைவளர்த்த
தென் றருமறைகள்முறையிடு மருள்பெறுவசந்தராயர், அண்ணாவி
னிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே......(௪௧)

(தந்ததாவளவிதிகூறியது.)

இலைதிகழுமாவன்னிபரியநாயுருவிவேரிகழிகருவேலழிஞ்சி, லீந்
து நறுவிலிவாகை யார்ந்தபூலாநெல்லி யெழிஞுவல்வேம்புநார்த்
தை, மலர்தருங்கொய்யா நறுங்குமுளிருப்பைதுவர் வாய்த்ததாய்ப்
பாலுள்ளதாய், மருவுகைப்புள்ளதாய்த் தருமூறித்தாங்குலம் மறை
யவர்க்கீராறதாங், கலைதெரியுமன்னவர்க்கே காதசாங்குலங் கனவசி
யருக்கோர்தசங், கருதுசூத்திரர்தமக் கொன்பதாமங்குலங் கழியின்
மேற்றேறுள்ளதாய், அலர்தருந்தந்ததா வளவிதியதாமென்ப ரரு
ள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவ
ண்ணாமலைத்தேவனே ..........................................(௪௨)

(விபூதிகுழைத்திடுமுறைமைகூறியது.)

குழைத்திடுவிபூதிமூன் றங்குலத்தளவாக் கொடுத்தலைமேவிடநல
ம், கூறுநெற்றியிலிரு நான்கங்குலத்தளவு கோணுநெல்லெள்ளள
வை, தழைத்தளவையிடைவிட்டு திரிசூலவடிவாய்த் தரித்திடுதறிரிபு
ண்டரந், தனிமார்பிலும்புயத்தா றங்குலத்தொப்புடன் னிலோரங்
குலமிடல், கழைநிகர்முழங்கையின் மணிக்கட்டிலேநீறு கனமிலா
தேதொட்டிடல், சழுத்திடுப்பினிலுமூன் றங்குலக்குறியிடல் கணித்
தமகுடாகமவிதி, அழைத்தன்னமுதவுபாற் கவகோத்திரத்தில்வரு
மருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரி
ய வண்ணாமலைத்தேவனே.....................................(௪௩)

(பூசைக்காகாதபூக்களைகூறியது.)

இச்சிலாலரசுபூ சணிபெருக்காமணக் கிலையினிலெடுத்திட்டபூ வீஞ்சோலைபனையோலை பின்னலிடுகூடையி லெடுத்தபூவிடதுகையிற், பச்சிலையிலாவெறுங் கையினிலெடுத்தபூப் பாண்டத்தெடுத்திட்டபூ, பால்போனிறத்தது கிலதனிலுமெடுத்தபூப் பரிசுத்தமில்லாவிடத், துச்சிதமதென்றே யெடுத்தபூக்கீழ்விழ்ந் துதிர்ந்தபூமோந்திட்டபூ, வுண்மையாய்ப்பூசனைக் காகா துகுற்றமென வோதுஞ்சிவாகமங்கள், அச்சுதன்கண்மலர்பறித்திடவுவந்தவா வருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே......................(௪௪)

(பூஜைக்காம்புஷ்பவகைகூறியது.)

வில்வமலர்கொன்றைமாந் தளிர்புன்னைமல்லிகை விரிந்தசதகுப்பைதண்ணீர், மிட்டான்பருத்திபொன் மத்தைவெண்மந்தாரை வெண்பட்டிவெள்வழுதுணைச், செல்வநிறைதாமரை நறும்பச்சைவெண்காசை தேமுறழ்மருக்கொழுந்து, செய்யமந்தாரைபன் னீர்முல்லைமாதுளஞ் செழுமலர்க்கொன்றையாத்தி, புல்லறுகழிஞ்சில்பொன்னாவாரைசெவ்வந்தி பூத்திகழ்குதம்பைவெட்சி பூளைமலர்நார்த்தசெவ் வரவிந்தஞாழலிவை பூசனைக்காகுமலராம், அல்லிமலர்கொண்டுசிவ பூஜைபுரிநேசனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.........(௪௫)

(இ-து.)

தேவிசெங்கழுநீர்பசுந்தும்பை கோங்குசிறுசெண்பகம் வெண்பட்டிகை, சிறுநாகமல்லிகை வலம்புரியடுக்குநந் தியாவர்த்தநீலோற்பலம், நாவல்பூம்பாதிரி புரோசைபொன்மத்தயெழி ணாயுருவிகுமரிவேங்கை, நாணல்வெண்காக்கணங் கோட்டங்கடம்பலர் நறுந்தாளிவெள்ளெருக்குப், பூவுறுகருந்துழாய் வன்னிவெண்கருடையாம்போதுமால்காந்திபிச்சிப், பூவிணாடுவேரிலாம் பிச்சமிவைசிவபூஜை புரியுமலரென்பர்கண்டாய், ஆவலன்போடுதமிழ் நாவலர்க்குதவுமுகி லருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..............................(௪௬)

(இ-து.)

கரியசெம்பைப்பூப்பசுங்குசைசெழுஞ் சேவகன்போதுசெம்பாதிரி கள்ளொழுகுவெள்ளலரி வெள்ளைத்திலோத்தங் கமழ்ந்திடுஞ்சிவகரந்தை, விரிதரும்வெட்ப்பாலை மாமணிப்பட்டிகை மிகுங்கொடிப்புலிதுடக்கி, மென்குராக்குன்றுத்தி சண்பகம்பூகம் விளாக்கிளுவைவெள்ளைநொச்சில், மருவுகருவெண்ணெய்தல் கொட்டைக்கரந்தைகிளை மண்டுகண்டங்கத்திரி, மாதளைசெருந்தியை வண்ணமிருவாட்சியிவை மாபூசைபண்ணுமலராம், அரியகண்ணப்பர்சன் மலர்கொண்டவிமலனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே........................(௪௭)

(இ-து.)

நிலமருவுதமரத்தை வெண்கோங்கசோகுதண் ணீராம்பலாண்குறிஞ்சி, னிலவுவெள்ளைத்துளவுமாவிலிங்கத்தளிர் நிறைந்திடுபெருங்கரந்தை, குலவியகருங்காலிசெவ்வேங்கைவெண்ணிறக் கொக்கிறகுவெள்ளடுக்குக்; கூடுமேந்தாரங்கதிர்ப்பச்சையார்ந்தகுங்குமவலரிசருமைவெண்மை, நலவெளர்ச்செவ்வத்திபோரிசழ்த்தாமரை நவின்றநூற்றெட்டுவகையின், நன்மலர்சிவார்ச்சனைக் காமென்றுபுட்பவிதி நவிலாகமத்தின்முறையே, அலர்கொண்டுநாடொறுமனேனும்மணிப்பூசைபுரி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே...... ...............(௪௰௮)

(சிவலிங்கவகைப்பலன்கூறியது.)

ஆற்றுமணலாலேயிலங்கமேவாணித் தருச்சனைபுரிந்தபேருக், காயுளுண்டாம்பசுஞ்சாணலிங்கப்பூஜை யாற்றுவோர்க்கர்த்தமுண்டாம், நீற்றிலிங்கார்ச்சனம் முத்தியுண்டாநித்த நியதியாயாற்றோரமண்ணேயலிங்கஞ்செய்துபூசித்தபேர்க்கின்ப நிதிமைந்தர் பேறுமுண்டாம்; மாற்றருஞ்சந்தனச்சாந்தாலிலிங்கம் வகுத்துவழிபாடுசெய்யு, மானிடர்தமக்குக்குபேரபாக்கியமவனி மணிமாடமனைகளுண்டாம், ஆற்றமுடையவர்பூசையரசாக்ஷிசெல்வமா மருள்பெறு வசந்தராயர்; அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே...............(௪௰௯)

(அர்ச்சனைமுதலியதருமமொன்றுக்கொன்று விசேஷிங்கூறியது.)

ஓராயிரம்பூவினாலருச்சித்தனிக மொருவில்வமர்ச்சித்தலா, மோராயிரங்கிணறுவெட்டிவைத்ததுநிகரு மொருதடாகப்ப்ரதிஷ்டை, ஓராயிரம்மனைகள்கட்டிவைத்திடுபலன் சேருமொருமடமமைத்தல், செப்பருங்கிரகத்தராயிரம்பேர்க்குநிகர் தீதிலொருசன்னியாசியாம், பேராயிரஞ்சொல்லுமந்திரநிகர்க்குமொரு பெறுமுத்திபஞ்சாக்கரம், பெரிதுமெண்ணான்கறநிகர்க்குமொருஞானியை பிட்சைசெய்வித்தலாகும், ஆராமசிங்கபுரிவாழ்தருந்தருமதுரை யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே...............(௫௰)

(பலன்களைக்குறித்துபூசைசெய்யவாரங்கட்குபுஷ்பவகைகூறியது

ஆதிவாரத்திலேவில்வமர்ச்சிக்கிலோ வஷ்டமாசித்தியுண்டாம், அமலனைச்சோமவாரந்துளபமர்ச்சிக்கி லளவிலாச்செல்வமுண்டாம், நீதிசெவ்வாயினில் விளாவருச்சிக்கினன் னேயமுளமைந்தருண்டாம், நிகழ்புந்திவாரமா தளையருச்சிக்கினன் னெறியுமெய்ஞ்ஞானமுண்டாம், வேதியன்வாரமதில்வங்கமலர்கல்வியாம் வெள்ளிநாவற்கொழுந்து, மேதினிக்கரசனுஞ்சனிவாரமால்காந்தி மெய்யினோய்வாராதுகாண், ஆதியினில்வல்லாளராயற்குநேயனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே...............(௫௧)

(ஆலயத்தீப மொன்றுக்கொன்று விசேடங்கூறியது.)

ஓதரியதேவாலயங்களுக்குள்ளே யுவந்துதேங்காயெண்ணெயா
லொருகோடிதீபமிட்டதையொக்கு நல்லெண்ணெ யொருவிளக்கே
ற்றிவைத்தாற், நீகறந்தெளிவான நல்லெண்ணெ யொருகோடி தீபங்
களிட்டதொக்குஞ், சேருமிருகொம்புள்ளவெண்பசுவின்னெய்யினா
ற் றீபமொன்றேற்றிவைத்தா, லீதிபுனைபசுவின்னெய் யாயிரம்விள
க்கொக்கு நினைமுலைக்காயிலுப்பை, நெய்விளக்கொன் றிடவிவ்வாயி
ரந்தீபங்க ளிகர்கருப்பூரதீபம், ஆதியிற்பரவைமனை தூதுசெலுமண்
ணலை யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலை
க்குரிய வண்ணாமலைத்தேவனே ...................... ...............(௫௨)

(உட்சமயமாறின்பெயருந்தேவதையுங்கூறியது.)

சந்தகணபதிபூசைபண்ணுவதுபாசுபத சமயமாங்கதிர்வேலவன்;
றன்பூசைபண்ணன்மாவிரதசமயஞ்சிவன்றன்பூசைசைவசமயங், கந்
தரணவீரபத்திரபூசை பண்ணுவது காளாமுகச்சமயமாங், கருதி
வைரவதேவனைப்பூசைபுரிவது காணும்வயிரவசமையமாம், பந்தன
பயோதரபராசத்தியைப்பூசை பண்ணுவதுவாமசமயம், பகருமிச்ச
மயங்களாறுமுட்சமயமென பன்னுஞ்சிவாகமங்கள், அந்தரற்சரிதா
னமெய்ஞ்ஞானபூசைபுரி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்
றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.......... (௫௩)

(விபூதிவாங்கிதரிக்கும்விதிகூறியது.)

ஒருகரந்தனைநீட்டி மூன்றுவிரலால்வாங்கி யொருவிரலினாற் பூமி
மே, லுதிரும்படிக்குநீறிடுவோரகோரநரகொருகோடிகற்பமாழ்வா
ர், இருகரங்கொடுதொழுதுவலதுளங்கையிலேற் றிறைவனெதிர்குரு
வினெதிரே, யெரியினெதிர்வழிநடுவிலாசூசமேவுழி யிடமெள்ள
ளவாயினும, பெருநிலந்தன்னில்வீழாமலண்ணாந்து பேசுடஞ்சா
க்கரத்தைப், பேரன்பினாலுன்னிவெண்ணிறவிபூதியைப் பெட்புடன்
பூசுவோர்கள், அருணிறையுமுயர்கதியுமாயுளும்பெருகுவா ரருள்பெ
றுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணா
மலைத்தேவனே... ..... ..... ................................(௫௪)

(உருத்திராக்கந்தரிக்கும்விதிகூறியது.)

உச்சியிடையோர்மணிதனைதரித்தவிருகாதிலு மூயர்ந்தமரமணியா
மிரண், டுத்தமாங்கச்சிரத்தெண்ணைந்துநீள்கழுத் தாடுமுப்பத்திரண்
டாஞ்' செச்சையணிமார்புநூற்றெட்டுருமுழங்கையிற் செப்புமிரு
பத்தாறதாஞ், சேர்த்திருமணிக்கட்டிவிருபத்திரண்டுமணி தேர்ந்து
ருத்தராக்கமணியை, நிச்சயப்பயபத்திநியமநெறியுள்ளன்பு நேயநி
றையார்வமுடனே, நித்தலும்பூசைபுரிகாலத்திலாயினு நீங்காதணி
ந்தபேர்கள், அச்சிவசொரூபமவராமென்னுமாமறைக ளருள்பெறு
வசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணா
மலைத்தேவனே,...................................................(௫௫)

(செபமாலைக்குவிதியும்பலனுங்கூறியது.)

செப்பவிருபத்தைந் துருத்திரமணிக்கோவை சேர்த்துசெபமன்பொடுசெயிற், செப்பரிய முத்திதருமைவொன்பதக்கமணி செல்வமேன்மேலாயிடும், பையவெண்ணான்குமணிகல்விநலமுந்தரும் பதினைந்துமாபிசாரப். பாலதாம்பதின்மூன்றுமேவுமுச்சாடன பலந்தருஞ்செப மாலிகை, கையினிற்சிறுவிரலின் மேற்றள்ளல் ஞானமது காட்டும்பவித்திரவிரல்; கனகமுறுநடுவிரற்பகைதருந்தற்சனி கடிய நோய்விளிவுமுண்டாம். ஐயமிலையங்குட்டமருளைதழைத்திடு மருள்பெறுவசந்தராயர். அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே....................................... .............. ...(௫௬)

(செபஞ்செய்யுந்திக்கின்பலன்கூறியது.)

நல்லகீழ்முகமாயிருந்துசெபமேசெய்யி னாடொறும்வசிய முண்டா, நாடுமக்கினிமூலைநோயிலைத்தென்றிசையை நாடிச்செபம்புரிகிலோ, வெல்லருந்தீமைதருநிருதிநல்குரவே விளைத்திடுவகுடதிசையதொ, வேண்டிமுன்னேறுபொருள்சிலவுண்டுவாயுதிசை வீறுமுச்சாடனமிதம், சொல்லரும்வடக்குமுகமாய்ச்செபஞ்செய்திடிற் சொன்னமுங்கல்விநலமுந். தோன்றுமீசானதிசை முத்திவீடாமென்று சொல்லுஞ்சிவாகமங்கள், அல்லலறவெத்திசையு மாகுமெதிசட்குநல்லருள் பெறுவசந்தராயர். அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.................................. ..........(௫௭)

(பிரதோஷதரிசனவிதிகூறியது.)

நன்னுதிரயோதசிதிதியதேபிரதோட நாளென்றுபெயராகுமந், நாளிலிருபத்தாறுநாழிகையதற்குமேனுநாழிகையநில.வண்ணராத்திரியின்மூன்றரைநாழிகைத்தொகை வரைக்கும்பிரதோடகாலம், மறவாமலேசிவாலயநந்தியிருகொம்பு மத்தியினிலாட்டம்வைத்து, வெண்ணந்திகேசுரன்விஷணத்தைநீவிவான் மேவுழியினின்றிறைஞ்சி, விமலசிவலிங்கத்தையரகரவெனச்சொல்லி விழியினாற்றெரிசிப்பவர், அன்னைலநனாற்செல்வமோடாயுளும்பெறுவ ரருள்பெறுவசந்தராயர்; அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே........................ ........................ ...(௫௮)

(அனுசிதபதார்த்தங்களைக்கூறியது.)

பனையினதுவெள்ளங்கிழங்குருங்கொடுபணம்பழ மிவையருந்தலாகா; படர்தருசெடிப்பசளைசெம்பசளைசிறுபசளை பரியகுண்டைச்சுரைக்காய், சினையுலவுமரவள்ளியீருள்ளிவெள்ளுள்ளி செங்கீரைசெம்முருங்கை, தென்னவெல்லத்திறெடுமீச்சவெல்லங்காச் சிரக்குபான்புள்ளிபுண்ணாக், கினியதேன்கையாற்பிசைந்ததயி ரொட்டைநெய்பெருமைசெம்மரியசப்பா, லீன்றநாட்பத்திற்கறந்தபாற்சூதகத்தில்வீற்கறந்திட்டபால்' அனுசிதமிதாசாரமுடையோரருந்திடா ரருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே................................. ....... ....(௫௯)

{ நாடோறுஞ்செய்கையால் வருமைவகைப்பாவரு மதற்குநிவிர்த்தியுங்கூறியது. }

தினந்தொறும்பலபண்டமம்மியிலரைப்பதாற் செறிவிறகடுப்பிலிட்டுச், செத்தீயெரிப்பதாற்றண்ணீர்குடத்தினுட் சேர்ந்திடமுகக்குமதனுன், முனைந்துசோதினிகொடுபெருக்கிநற்சாணிபட முறையாட்மெழுக்கிடுவதான், மூரிபரிவாண்மனையிலேகறிகுறைப்பதான் மூனுலமைம்பாவநீங்க, நினைந்துமனறயோதிடறருப்பணம்விடுத்திடனெருப்பினிடையோமஞ்செய் னியமமொடுபலியிடுதறன்பாலுவந்துவருநியதிபெறுமதிதியோர்சட், கனம்பசர்தலிவைதினஞ்செய்மகமிதென்பர்காணருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.................. .........(௬௰)

(நாடோறுஞ்செயும்பஞ்சயாகங்கூறியது.)

பரிவொடுங்காலைக்கடன்கழித்தருமறை பகர்ந்திடுதல்பிரமயாகம் பலவமரிருடிபிதுராதிகடருப்பணம் பண்ணுமது பிதுரியாகமாந், தெரிதரும்விதியினூற்றீவளர்த்தோமவினை செய்குவதுதேவயாகஞ், செப்புஞ்சிவாகமப்படியன்னபலியிடுத றேர்ந்திடும்பூதயாசம், வருமரியவதிதியர்க்குளமகிழ்ந்தன்னம் வழங்கன்மானிடயாகநோய், மாற்றுமகமைந்துந்தினஞ்செயிற்பாவமறுவாராதெனத்துணிந்து, அரனருள்பெறுஞ்சைவமறையவர்புரிந்திடுவ தருள்பெறு வசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.()

(போஜனத்திற்குற்றங்கூறியது.)

பந்தியிடையோதனமிருட்புக்கரண்டியாற் பரிமாறவுண்ணறோடம், பாவையரிடுங்கறியைமீண்டுகொடுவ. வெவைப் பன்னியிட வுண்ணறோடஞ், சந்தியாகாலத்துமத்தராத்திரியினுந் தயிரடிசிலுண்ணறோடஞ், சாலவயலாருண்டநற்கலந்தன்னிலேதாறுண்ணலதிகதோடம், செந்தெடுத்திடுமட்கலத்தினுந்தகரத்துமிகவுடைந்திடுகலத்து, மேவுமுள்ளங்கையினு மிட்டுண்ணனின்றுண்ணன் மேலானதோடமாகும், அந்தமிகுபொன்வெள்ளிபாத்திரத்திலையுசிதமருள்பெறவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.............................................................(௬௨)

(போஜனகாலத்தன்னபலியிடும்விதிகூறியது-)

போஜனஞ்செயுமிடந்திருமெழுக்கிட்டுப்பொருந்தியகிழக்குமுகமாய்ப், பொற்பாயிருந்திட்டவடிசின்மேலுதசம்புரோட்சித்துடன் வலப்பால்; வாசநறுநெய்யன்னமைந்துபிடிபலிவைத்து மந்திரநவின்றுநன்னீர், வலமாகவாபோசனங்கொண்டமிகுநீர் மருவுசிறுவிரலின்வழிவிட்; டேசறுபலிக்கொடிக்கிட்டசனமைங்காலெழிற்பிராணாகுதிபுரிந், தின்னடிசிலுண்டுத்தராபோசனங்கொண் டெழிற்சேடநீர்ப்பெருவிரல், ஆசில்வழிவிட்டெழுதலாசாரசைவநெறி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.... ............................................ ...(௬௩)

(போஜனஞ்செய்தபினனுட்டானவிதிகூறியது.)

போசனஞ்செய்தபின் பாசமனமுஞ்செய்து பொற்புடன்வடகிழக்காம்,போருகாசனமேவி வில்வலனவாதாவிபொன்றிடவயிற்றைவருடித், தேசொடுஞ்சீரணஞ் செய்தகும்போதயச் சிவமுனியையுன்னியோர்த்து, திலமளவுதிருநீற ருந்திப்புனைந் துளந் தேர்ந்தங்கன்யாசமுடனே, வாசியுளெழும்பிரா ணாயாமமாற்றிநா மௌனமாய்மூவேழுரு, மந்திரமகோரத்தை யுள்ளெசெபித் துமேன் மகிழ்வொடுமிருப்பர்நாளும், ஆசையொடுகிரகத்த வாச்சிரமநெறியென் பரருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..............................(௬௪)

(தாம்பூலந்தரிக்கும்விதிகூறியது.)

மெல்லிலைக்காம்பும் பழுப்பொடுகோம்பதன் மேற்றெருறும்புங்க சங்கன், மிகமுறுகலழுகலும் வதங்கலிவ்வெட்டுமே வெற்றிலைக்குற்றநீக்கி, நல்லபாக்கெச்சின்முக் காலுமிழ்ந்தாராய்ந்த நறியவெள்ளிலைகிழித்து, நண்ணுகற்சுண்ணங் கிராம்பேலதற்கோல நன்மிளகுவாண்மிளகுநேர், சொல்லருஞ்சுக்கு மணமேவுசாதிக்காய் தொடர்ந்திடுஞ்சாதிபத்திரி, சுகவாசபூரமிவை தாம்பூலசகிதமாய்த் துய்த்திடுவர் செல்வர்கண்டாய், அல்லியலர்வாவிசூழணிபணாமலையனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே..............................(௬௫)

(தோடம்வரும்வகைகூறியது.)

ஊணருந்துங்காலை பேசனகைசெய்தல்பிடி யுண்டையாயுண்ணல்சிந்தல், ஒருவிரலைநீக்கியுணன் மயிரொன்புபூச்சிபுழு வுகிர்பட்ட சோறுண்டிடல், காணாநகமயிரினைப் பல்லாற்கடித்தலொருகாலினாற்காறேய்த்துநீர், கழுவிடுதலுண்கலத் தெச்சிலைபுமிழ்ந்திடுதல் கையினானகமுரித்தற், பாணியாற்றலைசொறிதல் விரலினாற்றனைசீறல் பாழ்மனையிலேயுறங்கல், பட்டசஞ்சாக்கட் குடித்தல்பெரியோரைப் பழித்தனித்திரையெழுப்பல், ஆணைதள்ளுதலிவை மகாதோடமென்பர்கா ணருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..............................(௬௬)

(ஆசமனஞ்செய்யுங்காலங்கூறியது.)

வாசமலர்கொய்யினும் வீதியிலடைபோய்வரினு மலசலம்விட்டுவரினும், மாதரொடுசம்போக மேவிடினுநீசர்நிழன் மருவியுடன்மீதுபடினுந், தூசனையுடுக்கினும் பலகாரமுண்ணினுஞ் சோறுண்ணினுநீருண்ணினுந், தூயநற்கருமங்க டருமங்கள்புரியினுந்தொகுசிரார்த்தங்கள்செயினுந், தேசுதருதானங்கள் செய்யினுங்கனிகாய்கடின்னினுந்தூங்கியெழினுந், தீயகொலைசெய்குவோர்பாயுநிழறேயினுந்தீண்டொணாதவைதீண்டினும், ஆசமனமக்கணஞ்செய்யவிதியென்பர்கா ணருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே..............................(௬௭)

(முதேவிவாசமுந்தோடமுள்ளவையுங்கூறியது.)

நாட்டரசுநீழலும் விளாமரத்தடிநிழலு நன்மனைவிளக்குநிழலு, நடமாடுமனிதர்நிழ லிரவினுடன்மேற்படி னலமிலாசேட்டைபருவும், பூட்டுநூன்மறையவர் கடந்நிழன்மிதித்திடற் புனிதநீரொருவனுண்ட, புனல்சேடமொருவனுண லாடைதோய்த்திட்ட நீர் போசனஞ்செய்யலாகா, வீட்டிடைபெருக்கிய விளக்குமாற்றுப்புழுதிமென்மயிருருத்தபுழுதி, விரிநிங்கழுதைநாய்ப் புழுதிவெந்திடுசாம்பல் வேசாக்கரிப்புழுதியும், ஆட்டிடைப்புழுதிபட லாகாதுமேலன்பரருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே........................................(௬௮)

(இவ்வகையமையிற்பயிர்சிறப்பெனக்கூறியது.

விளையுநன்னிலமுமாய்த் தண்ணீருமருகதாய் விளைவெலாம்மனையிடமுமாய், வெள்ளிமலைபோலெருது கருமலையெனக்கடா விடுகோலுமரயேருமாய், களவிலாநெஞ்சுடைப் படியாளுமாயுழுங் காலத்துமேலயுழவுமாய், சனமானகிடையெருத் தழையுமாய்நாற்றுவிளைகாலுமாய்மேடளவுமாய், வளமானபாடுமாய்க் களைபறியுமாய் வேலி வளைவுமாய்விளைகாவலாள், வைப்புமாய்நாடோறும் வந்துபார்க்குந்திறமு மாயிருந்தாற்பயிரிடும், அளைதருங்கொழுமனைச் செல்வமேசெல்வமா மருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே...... ......(௬௯)

(இந்நாணிக்கிபிந்நாளிற்கூடிற்சுபுத்திரருண்டாமெனல்.)

இங்குளசரீரமுண் டாகின்றவயணமோ வேகாதசிப்பூரணை, பியலமாவாசை மாதப்பிறப்பாகா திருக்குநாளிவைநீககியே, மங்கையர்கள்பூத்து நீராடியதினந்தொட்டு வருமாறிரண்டுநாளும், வாலாயமாய்க்கருக் குழிவாய்திறந்திடும் மணவாளனுடுகலந்தாற், பொங்குசுக்கிலமுஞ்சுரோணிதத்தொடுசேர்ந்துபூரிக்குமொண்சிப்பியிற், பூத்தமுத்துப்போலு மறுகுநுனிமேற்பனிப் போலுந்திரண்டுருவமாம், அங்கமலனேவந்த லமைப்பனேயிவ்வுருவ மருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே........................................(௭௰)

(சரீரமுண்டாகுமுறைமைகூறியது.)

சுக்கிலஞ்சோணிதத் திட்சேர்ந்துசோணித சொரூபமாய்த்தமர்வாசலைத், தோன்றுதடைத்திடும் வாயுவேவேலிபோற் சூழ்ந்துகாக்குறும்விந்துவே, டொக்கப்பிராணவாய் வொளியாமபானவாய் வொன்றியேவெளியினிற்கு, மூட்டாய்ந்துவிந்துடன் பிராணவாயுக்கூடியுள் ளேசலந்துநிற்கும், மிக்குதானன்சரு வளர்க்குமக்கருவுக்குண்மேவும்வியாநிமூன்றும், விரவிக்கலக்குமைந்தாநாட்கருக்குமிளி மேனிபோலாய்வளருமே, அக்சமணிதுற்கையுறை மிக்கபதிவாசனே யருள்பெறுவசந்தராயர். அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே........................................(௭௧)

(சரீரம்வளரும்வகைகூறியது.)

கருத்தரித்திட்டபத் தாநாடிரண்டுருக் கண்டுமுளைபோன்முளைத் திக், கருதுபதினைந்தாந் தினத்திலேமுட்டைபோற் காணுமக்கருமி தந்தே, யுருத்தருமுதற்றிங்கள் கம்பமாமிருமதியி லுற்றதலைமுதுகுகமுமா, மோதுமூன்றாந்திங்கள் செங்கையும்பாதங்களுறுவிரல்களாயுமுண்டாந், திருத்துநாலாந்திங்கண் மூக்குமுகமுருவமாஞ் செய்யவைந்தாந்திங்களிற், செவிநாவுகண்களாஞ் செப்புமாறாந்திங்கள் சேர்ந்திடுநகங்களுண்டா, மரத்தமாணிக்கம்பதித்த முடியரசர்புகழருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.................... ................. ௭௨)

(இ-து.)

விஞ்சுமேழாந்திங் கண்மயிர்நரம்பென்பும் விளைந்திடுஞ்சடமோடுதான், மேவிடுஞ்சலமலந் தங்குதாதுக்களு மிடைந்தூமூச்சுண்டாகுமே, யெஞ்சிலெட்டாந்திங்கடாயுண்டசாரங்களியாவுமுனையானகதிர்போ, லேய்ந்தருவிபாய்ந்தே கபாலத்தின்வழிசென் றிழிந்தக்குழந்தைவளருங், கொஞ்சவுநவோவொன் பதாந்திங்களறிவுமேற் கொடுபிறப்பித்தோன்றனைக், குரித்திருகரங்கூப்பி யருடாவெனத்தவங் கொண்டேயிருந்துபுரியும், அஞ்சலப்பையொரீ இவெம்பிறவி நோக்குமே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே ..........................(௭௩)

(பிறவித்துன்பத்தின்மேலசங்கூறியது.)

கொடியபத்தாந்திங்கள் சற்குருப்பார்வையே கொண்டிடுங்குழவிதன்னைக், கோதறுமபானவளி கீழ்நோக்குவிக்குமக் குழவிபூபதனமாகிப், படியிற்பிறந்திட்டபாலன்மாயாபடாப் போர்வையான் மறைந்து, பண்டையிலிருந்தபே ரறிவழிந்திருவினைப் பாசவலைபிற் படித்து, துடிபளவுநேரநீங் காக்கவலைநோயிலே தோய்ந்துற்பவிக்குநோக்கிற், சுவாக்கொடிபடர்ந்ததை நிகர்க்குமிச்சனனமாந் தோதகமொழிப்பரறிவோர், அடியணாமலையனே தொடியராவணியனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே..................................... ..........(௭௪)

(அட்டலட்சுமிபெயர்கூறியது.)

மட்டிலாச்செல்வங்கண் மருவுதனலக்குமி வளர்ந்ததானியலக்குமி, மணிமாடமனையாதி செந்நெல்வயமேருட்டங்கள் வளமிகும்பூலக்குமி, யிஷ்டபாக்கியகுணச் சந்தானலக்குமி யெழுத்தொடுநிறைந்தகேள்வி, யியல்பானபுத்திவளர் வித்தியாலக்குமி யிசைந்தவீரியலக்குமி, திட்டமாயெங்கணுஞ் சென்றபோதினும்வெற்றி சேரும்விசையாலக்குமி, தீமைவந்தாலுங் கலங்காதிருக்கின்ற தீரதைரியலக்குமி, யட்டலக்குமிவாச நேசதுரைராஜர்புக ழருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.....................................................(௭௫)

(ஆடியைந்தாந்தேதிவரும் வாரத்தின்பலன் கூறியது.)

ஆடிமாதம்பிறந் தைந்தாந்தினத்திலே யரியபுதவாரம்வந்தா, லவ்வருடமொருபோக நாடெலாமிகவிளையு மவனிமேலிட்டபயிர்கள், பாடுளவியாழம்வரி லிருபோகமேவிளைவு பாரெலாஞ்சுகசீவனம், பண்ணுசுக்கிரனெனில் கதிர்ச்சாவிசனியனே பயிரொன் றும்விளையாதுகாண், நீடுஞாயிறுபயிர்ப் பாழ்திங்களொருபோக நெல்விளையுமேசெல்வமாம், நேர்ந்தவங்காரகன் டனிச்சோளமேவிளையு நெறியீதுகுறியென்பர்காண், ஆடல்புரியண்ணலே மாடமளிகைசெல்வ மருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே................................(௭௬)

(புஷ்பவதியான நக்ஷத்திரபலன் கூறியது.)

மன்னுமசுவினியிலே புட்பவதியாயிடின் மகுணனுக்கேதோடமாம், வான்பரணிநாணல்ல மைந்தருண்டாங்கனக மருவுகார்த்திகைமலடியா, மூன்னுரோகணிதீர்க்க மங்கிலியமுடையளா முலவுமான் றலைதலைவனுக், குயர்சுகமளிப்படி ருவாதிரைவெறுப்புமன முடையளாம்புணர்பூசநாள், பொன்னெழில்சுகந்தரும் பூசஞ்சிறப்புடையள் பொலியுமாயிலியமைந்தர், பூத்தொழியுமகமுரிய புருடன்மேலதிகாமிபூரமைந்தர்களாணியாம், அன்னநடையார்நடனசாலைவளர்சிம்மபுரி யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........................(௭௭)

(இ-து.)

உத்திரம்பதிவிரதையத்தமென்மேற்செல்வமுண்டாயிடுஞ்சித்திரை, யோங்கியநலந்தரும் பாங்குறுசுவாதிசுக முற்றிடுந்தனிவிசாகம், மத்திபந்தலைவனுக் கல்லல்புன்னேய்கேட்டை மறுபுருடனிச்சைமூலம், வாழ்வுபால்பாக்கியம் பூராடமடிமைகெடு மாமுத்திராடஞானப், பத்தியுறுமோனநற் பொருளாமவிட்டம் பசும்பொனுள்சதையநிதிபோம், பகரும்பூரட்டைமலடுத்திரட்டாதிமிடி படுமிரேவதிநடலையாம், அத்தந்துகிர்ச்செறி மடந்தையர்கள்பூத்தபல னருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே....................................(௭௮)

(ஆகுசமுகூர்த்தவிடங்களைக்கூறியது.)

தேவாலயங்களிற் சந்நிதானங்களிற் றிருவிழாவிற்சிறந்த, தேர்நடந்திடுபொழுதி லருமறைபகர்ந்தவழி செய்யுந்தழற்சாலையிற், பாவாணர்கல்விப் பிரசங்கம்புராணம் படிக்கின்றவித்வசபையிற், பார்வைக்கலங்கார சோபனமுகூர்த்தங்கள் பண்ணுமவிவாகசபையிற், கோவாரசிங்காதனத் திருந்தரசுசெங் கோல்கொண்டராசர்சபையிற், கூறுமிவ்விடமெலா மாகுசமிலையென்று கூப்பிட்டுனாக்குமறைகள், ஆவாகனத்தனே மாவார்வனத்தனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே,

(அசுவவிலக்கணங்கூறியது.)

நீலமரகதமுத்து மாணிக்கமம்பொன் னிறைந்தவெண்பளிசந்திரன், நெடியதாமரைமலர்க் காசைமலர்கருமுகி னெருப்புமணிவண்டு தீம்பாற், கோலமுறுகின்றசெம் பஞ்சுக்குழம்புகுயில கூறுமீரெட்டுநிறமாங், குதிரையுத்தமமிவையி லொருநிறமுடைத்தாய்க் குறித்தமுகமார்புச்சிவாற், காலிவ்வெட்டிடம் வெளுப்பாயிருக்கிலது கதியட்டமங்கலமதாங், கவினுமுகநாற்பாத மைந்தும்வெளுப்புமிற் கனபஞ்சகல்யாணியாம், ஆலவாயிற்பரியி லக்கணமுரைத்தவா வருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.................................(௮௰)

(இ-து.)

கட்டுவாம்பரிநாபி தொட்டுமுன்புறமெலாங் கதிர்போற்சிவந்து மதிபோற்; கவினுறும்பின்முழுது நலமாவெளுக்கிலக் கற்கி..கல்விஜயமென்பார், வட்டமதிபோலவே முற்புறம்வெளுப்பாய் வயங்கியேபிற்புறமெலாம், வடிவுசெங்கதிர்போற் சிவந்திடுங்கிள்ளையது மருவுகதிர்விஜயமென்பார், இட்டநூறங்குல முயர்ந்தபரியுத்தம மெண்பத்துநாலங்குல, மிவுளியதுமத்திபம தறுபத்தொரங்குல மியம்புமதமக்கோடையாம், அட்டமங்கலதுரக நித்தலுநடாத்துதுரை யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.................................(௮௧)

(இ-து.)

வாசியின்வயது முப்பத்திரண்டே வருடமருவிடும்பத்தவத்தை, மாற்றிலொருமூன்றுவச் சரமுமிருமாதமு மன்னுருட்பன்னிரண்டாம், பேசுபரியெவ்வண்ண பேதகமிருக்கினும் பெருவெள்ளைதான்கலந்தாற், பெட்புமிகுமப்புரவிதலைவன்றனக்குப்பெருஞ்செல்வமுங்கல்வியாற்,தேசுளகறுப்புப்பரிக்குவயிறேனுந்திகழ்ந்தநெடுமார்பமேனுஞ்,செஞ்சிவப்பேரினும்வெள்ளைநிறமேவினுஞ்செயவாருணத்துரகமாம், ஆசுமதுரஞ்சித்ர வித்தாரகவிஞர்புகழருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.................................(௮௨)

(இ-து)

எறுபரிமாக்சழுத் திடையிரட்டைச்சுழி யிருக்கின்மிடியின்னலுண்டாம், இருகாவிலேயிரட் டைச்சுழியிருக்கிலவ் விவுளியாளிகளபந்தங், கூறருங்கொடியவினை யாமிறுதியுண்டாங் குதக்குமீருதடுதனினுங், குலவுமுற்காலடியி னுங்கபோலத்தினுங் கோதறமுழந்தாளினும், வீறுசுழிதானுன்றின் மாவேறுதலைதனை வெவ்வினைமிகுத்தொறுக்கு, மேவுமிவுளிப்பந்தி யூடுறைப்பண்டய மெலித்துநல்குரவெய்திடும், ஆறலவுசெம்பவள வேணிமதிமுடியனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே.................................(௮௩)

(இ-து.)

தெரிதருகழித்திரினிடை யொருசுழியிருந்திடிற் றெய்வமணியென்
றுபெயராந், திருமகள்விலாசமுண் டாமுகத்தலைநாசி தி:ருமார்பி
வைநாலிடம். மருவியவிரண்டுசுழி யுண்டாயின்வெற்றிதரு மாநீ
லாச்சரிமத்தகம், மணியாயிருக்கிலவ் வாசிமேமேலூர்வார்வாழ்வுமே
ன்மேலாயிடும், விரவுநெற்றியி னடுவிலொருசுழியிருக்கி னதுவீறு
நிதிமதியுமுண்டாம், மேலிவ்விடங்களிற்சுழியிலாவிவுளியின்மேலே
றலன்றன்றுகாண், அரியயற்களவிடற் கரியபேரழகனே யருள்பெ
றுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணா
மலைத்தேவனே............................................(௮௪)

(இ-து.)

வேங்கைநரிசிங்கம் முயன்மயின்மல்லரம் புமதவேழங்குரங்கு
போல, வேகமுளனடையதாய்ச் சங்குவெண்கன்னலின் விலாழிகா
ல்வாய்நுரையுமாய்த், தாங்குவிற்றெருளிசங்கு மேகமத்தளமேறு த
ண்டிரைமடங்கவெருளியாய்ச், சாற்றுகுறமகள்போற்கவிழ்ந்தமுகமா
கநாத் தழையுமாந்தளிரினிறமாத், தேங்கமழ்மலர்ந்தகரு நெய்தல்
போலுக்கிரஞ்சேர்ந்தவிழியாய்ப்பற்கடாஞ், செப்பமாயொப்பமா
ய் வாலைந்துசாணாய்ச் சிறக்குங்குளம்புயரமா, யாங்குநிரைலக்ஷண
மூரைத்தவிதியென்பர்கா ணருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்
றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........(௮௫)

(இ-து.)

பாயும்பெரும்பரி முகத்திடைவெளுத்திடிற் பரராசரைச்செயிக்
கும், பணிபூண்கழுத்துவால் முதுகிவைவெளுத்திடிற் பாக்கியமே
லாங்கொடுக்கும், எயுமிருபிடர்வெள்ளை யாயிருந்தாற்புதல்வ ரின்ப
மேன்மேலுமுண்டா, மெழின்மார்புவெள்ளையுமில் கவலைநோயின்
றியே யெப்போதுமனமகிழ்தருந், தோயுமுகமிடதுபால் வெள்ளை
நிறமேவிடிற் றாயசந்தானமுண்டாந், தோன்றியவலப்புறம் வெண்
ணிறஞ்செல்வமாந் தாய்முகம்பிற்பாற்சுகம், ஆயும்ப்ரபந்தகவி நே
யம்பொருந்துதுரை யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதி
செயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே................(௮௬)

(இ-து.)

மார்புங்கழுத்துமர வப்படம்போலதாய் வாழைமடலொத்தசெவி
யாய், வதனமுக்கோணமாய் நுதலுயர்ந்தகலமாய் வைக்குமடியற்
றொத்ததாய், ஏர்புனையுநாலுகா லுங்கடைந்தேயதை யெடுத்துநா
ட்டியதும்போலா, யிருதுடைதிரட்சியாய்ச் சுழல்கின்றபோதுதீ யெ
ழுகடைக்கோலென்னலாய், போர்புரிமுகத்திலே வெட்டினுமெதிர்
ப்பதாய்ப் புரவியோன்மனமறிவதாய், பொங்ககழிகோட்டையுந் த
ங்கியதிருக்கமும் புலியெனப்பாய்கின்றதாய், ஆர்பரியிருக்கின்ற
துத்தமப்புரவிகா ணருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ
யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே...................(௮௭)

(இ-து.)

கொய்யுளைப்புரவியது நிற்கின்மலையென்னவுங் கூத்தினடமக
ளென்னவுங், குலவிடும்வாசனையின் மான்மதம்பாளிதங் குங்குமம
திற்கொப்பதாய், வெய்யகட்பொறியரா வட்டநெடுவீதிநடை விடுசூ
நூற்பத்தென்னவும், மேலேறுசேவகன் காற்குள்ளடங்கியே வேகத்
தில்வளியென்னவுஞ், செய்புநற்சாரிகைப் பதினெட்டுமுள்ளதாய்த்
திருத்தமிருநான்குவயது, சென்றபரிமேலேறல் விதியென்றுமாம
றைசெழும்பரியிலேறிவந்தெம், ஐயனேபாண்டியற் கறிவித்ததெ
ன்பர்கா ணருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணா
முலைக்குரியவண்ணாமலைத்தேவனே ............(௰அ)

(இவர்முன்னையிலின்னதுபெறவேண்டுமெனல்.)

தாமமாகியபிறவிசாராதமெய்ஞ்ஞானசாதனம்பெறவேண்டினோ
ர், சரிதைகிரியாயோகமுன்றுங்கடந்தமெய்ச்சற்குருவையடையவே
ண்டும், நாமமார்தருசிவா லயலிங்கதரிசன நாடியருள்பெறவேண்டி
னோர், நக்கன்வலக்கைதலை மேற்கொண்டவதிகார நந்தியைமுன்கா
ணவேண்டும், பூமியாளரசரைக் கண்டுகாரியசெயம் பூர்த்தியாய்ப்
பெறவேண்டினோர், புரவலர்கருத்துக்கிசைந்தமந்திரிகள்பாற் போ
ய்முன்புகாணவேண்டும், ஆமிகவளங்கள்சிம் மாபுரிவிளங்கவரு மரு
ள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவ
ண்ணாமலைத்தேவனே ............(௰௯)

(கலவியிற்கொக்கோகவகைகூறியது.)

நாடுமுடலிழையுமா லிங்கனமதோரைந்து நண்ணுமிதழதரபா
ன, நல்லசுவைபதினொன்று மமுர்தநிலைபதினைந்து நகுநகக்குறிக
ளேழுங், கூறுதந்தக்குறிக ளெட்டுமுயர்பறவைபோற் குரலோசை
யெட்டுமிருகைக், குவிதாடனங்களிரு நான்குமுறைகரணங்கள் கூறு
நாற்பத்தெட்டுமே, யூடுகலவிப்போக மெய்மயக்கிரொட்டு முறமூ
தூற்றிருபதுடனே, யோசாறுமொழிகின்ற கொக்கோகவிதமறிந்
தூடலோடினிதாகவேயாடவருமங்கையரு மநுபவித்திடவின்ப ம
ருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய
வண்ணாமலைத்தேவனே............(உ௰)

(பெரும்பாலுநோய்கள்வாராவகைகூறியது.)

எட்டுநாளைக்கிருமுழுக் காடுவோர்பட்ச மிருகண்கலிக்கமிடுவோ
ர், எத்தாகமதிதொறும் பித்தநீரொல்லா மெடுத்திடமருந்துகொள்
வோர், திட்டமாயெண்ணான்கு நாளைக்கொருக்காற்றிருந்திழைபுண
ர்ச்சிசெய்வோர்; செப்புமொருமூன்று மாதத்திலகுநசிய மதுசேரு
டன்செய்துகொள்வோர், வட்டமாமூவிரு மதிக்கொருவிரோசனம்
வாங்காமலேவாங்குவோர், வயிறுபசிகண்டுண்ணு வோர்களுக்கொரு
நோயும் வாராதமிகுதியாக, அட்டமாசித்திமுன் னிட்டமதுரோச
னே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமு
லைக்குரியவண்ணாமலைத்தேவனே............(உக)

(தீயோர்தேடுபொருள்போம்வழிகூறியது.)

வையகந்தன்னிலே தீயோர்களீட்டுபொருள் வம்பருக்காம்பிணிக்காம், வாயோட்டமாகவே பேயோட்டுபூசாலி மார்கடஞ்சிலவினுக்காங், கையகங்கொண்டலை பாதகர்க்காம்படைக் கன்னமிடுகள்ளருக்காங், கஞ்சாமயக்கபிணி சாராயமாசுனங் கடியகட்குடியருக்காம், மெய்புகஞ்சிறிதிலாப் பொய்வழக்கதுபேசும் வீணருக்காந்தழற்காம், வேசியர்க்காம்பூத மூசுமண்ணுக்காகும் வேந்தர்தண்டத்தினுக்காம், அய்யனேதுய்யனேசெய்யவெழில்மெய்யனேயருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........(௩௨)

(நல்லோர்பொருள்பயன்படுமாறுகூறியது.)

சேற்கடற்றரணியி னல்லோர்களீட்டுபோரு டேவாலயங்களுக்காந், தேவாபிடேகமா ராதனைக்காமையர் திகழ்சமாராதனைக்கா, நூற்கடற்கரைகண்டபுலவர்கட் காமவுனறுவ லுமெய்ஞ் ஞானியர்க்காம், நோற்குமாதவமுடைய பேர்க்காம்பசிக்கன நுகர்ச்சிக்குமுதவவாகும், நாற்கிளறும்வேதநெறி வேள்விகட்காஞ்சுகுண நன்னுதானங்களுக்கா, நற்றொண்டர்பாகவதர்தங்களுக்காம்புரியு நாலெட்டறங்களுக்காம், ஆற்கண்ணல்வர்க்கு முன்னருள்பரஞ்சோதியே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........(௩௩)

(பிரயாணத்துராசிபலன்கூறியது.)

மேடலக்கணமதனி லூர்ப்பயணமாகாது வீறிடபதலமுள்ளதாம், மிதுனத்திலெசெலுங் காரியமெதுப்படு மென்கடகமரசர்சேர்வை, நாடருஞ்சிங்கத்தி லாபமேவுங்கந்நி நளிர்சுரங்காணுந்துலாம், நற்பொருள்கிடைக்கும் விருச்சிகம்பிணியி னைவியுநடுக்கமுண்டாங், கோடுருந்தனுசுசத் துருஜயம்மகரமது கொடியபயமாங்கும்பமோ, கொடியர்தண்டனையெய்து மீனமழையார்பயங்கொண்டயாத்திரையினப்போ, தாடுவேயுறுதோளி பங்கனெனனுரைகொள்கவருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........(௩௪)

(முக்குணத்தியல்புகூறியது.)

ஞானமருடவமேன்மை வாய்மைபொறைமோனமொடு நவைசெயைம்பொறியடக்கல், நற்கருமவியல்புநெறி சாந்தமுயர்கல்வியிவை நல்லசாத்தீககுணமாம், ஈனமறுதானமனவூக்கந்தவந்தருமமெழில்கல்விகேள்விஞானம், இசைவீரசௌரியமலங்காரமிவையே யிராசதகுணத்தினியல்பாந், தானுறுநெடுந்துயி லொழுக்கமுதனீதிவழு தாழ்வஞ்சமாதிகோபந், தாவுகொலைபேருண்டி சோம்புபொய்காமமிவை தாமதகுணத்தன்மையாம், ஆனமுதலைந்தாடு மந்திவண்ணத்தனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே..........(௩௫)

பானுவுக்கீத்து [illegible]
னிறச்சங்குசெவ்வாய்க்குச்செகப்பெருது [illegible] ளும், வானியல்வியாழத்தனக்குவெண்பட்டாடை மாசுக்க[illegible] ளி, மருவியசனிக்குலவைகரியநிறமாயிலகு மயிடமாமெருமைக்க டாய், தானியவிராகுவுக்கச்சங்கறுப்புடைத் தானவெள்ளாட்டுக்க டாய், தக்கசெங்கேதுவுக்கோதரியமதயானை தா னம்மறையோர்க்க ளித்தல், ஆன து நவக்கிரகதானவிதியீதென்ப ரருள்பெறுவசந்தரா யர், அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணுமு லைக்குரிய வண்ணுமலைத் தேவனே.........................................................(௯௬)

(நவக்கிரகவுருவுந்தி[illegible]யுங்கூறியது.)

நடுவட்டமாமிரவியுருவிருக்கின[illegible] நாடுமக்கினிமூலையில், நா ற்சதிரமதியுருக்கார்த்திசைத்திரிகோ[illegible]னிலமகன்வடிவமாம், வடு விலீசன்றிசைப்பாணவடிவம்புதன்[illegible]சைத்தீர்க்கசதுரம், மரு வுபொன்கீழ்த்திசைப்பஞ்சகோணத்[illegible] யங்குநீர் தருசுக்கிரன், மிடையுமேற்றிசைதனுப்பாவுருச்சனி நிருதி மேவுசூர்ப்பாகாரமா ய், மேவுவனிராகுவடமேற்றிசைத்துவசமென வெங்கேது தங்குமி டமாம், அடையுமொன்பதுகிரகவடிவமுந்திசையுமீ தருள்பெறுவ சந்தராயர், அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணும லைத்தேவனே.........................................................(௯௭)

(நவதானியமுஞ்சமித்துங்கூறியது.)

சூரியன்கோதும்பைசெஞ்சாலிசோமனுந் துவரைசெவ்வாய்தன க்காஞ், சொல்லரியபுந்திக்குநற்பசம்பயரதாந் தூய்வியாழந்தனக் கு, வேரியங்கடலையாம்வெள்ளிக்குமொச்சையாம் மேவியசனிக்கெ ள்ளதாம்; வெற்றிகொளிராகுவுக்கானமாடங்கேதுவீளைகாண நவதா னிய, நாரிபலெருக்குப்பலாசங்கருங்காலிநாயுருவியச்சுவத்தம், நல் லத்திவன்னிகூர்புல்லறுகுநற்பையிவை நவசமித்தாகுமென்றே, யா ரியமுணர்ந்தமேலவரீதுவிதியென்பரருள்பெறுவசந்தராயர், அண் ணுவினிற்றுதிசெயுண்ணுமுலைக்குரியவண்ணுமலைத்தேவனே.(௯௮)

(மூவர்தேவாரத்தொகைகூறியது.)

பன்னருந்திருஞானசம்பந்தர்செந்தமிழ்ப்பதிகமீரொண்ணுயிரம் பண்பானசுந்தரரிசைத்ததேவாரமுப்பத்துமே லேழாயிரம், நன் னுதற்றிலகவதியாரொடுந்தோன்றுதிரு நாவினுக்கரசர் சொன்ன நற்றமிழ்ப்பதிகநாற்பத்தொன்பதாயிர நாடுமிம்மூவர் மொழியுள், பின்னொண்ணூற்றுறுபத்துநாற்பதிகமிப் பேருலகுதனில் விளங்கு ம், பேசுமிருநூற்றேழுபத்தைந்துசிவதலப் பெருமைசேர்பதிகமா கும், அன்னதிருமுறையெலாம்பன்னிசிவபூசைபுரி யருள்பெறுவச ந்தராயர். அண்ணுவினிற்றுதிசெ யுண்ணுமுலைக்குரிய வண்ணுமலைத் தேவனே.........................................................(௯௯)

...றியது.)

...வைபோசனங்கந்தம் மருவுசித்திரவஸ்த் ...மணியிழையணித்தயிலதாம்பூலமெண் வகையதேசிற் ...னபமாந், இனமணிவிபூதி ருத்ராக்கபஞ்சாக்கரந் தீர்த்தம்பிரசாதமாசான்; றெரிசனமிலிங்கசங்கமமெட்டுமன்பருட்டெளிதரும் பேரின்பமாந், தனியியமநியமமாதனபிராணாயாம தற்பிரத்தியாகாரமாம், தாரணைதியானஞ்சமாதியிவ்வெட்டுமே சாற்றுமட்டாங்கயோகம்; அனவரதநடனமிடுவனருகபதத்தனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே............(௱)

(நாலுயுகத்திலும்பூசைசெய்தவர்களைக்கூறியது.)

இதிலாதுயர்கிரேதாயுக...ன்னிலே செங்கனற்சோதிமலையாந், திருமாலயன்முதலவிமைமே...ண்மலறயினுற் சிவதருமமேபுரிந்தார். நீதிமாமணித்திரேதாயுகத்...கம நெறிதபோதனர்பூசனை, நிதிதுவாபரமதில்வச்சிராங்கதன்றரு நிருபனுஞ்வீரசம்பு, நாசமிணகலியில்வல்லாளபிரபுடதேவ ராயர்தருமஞ்சகார்த்த, நவிலாயிரத்தெழுநூறுமெழுபத்துமேனுமிலவங்கவருட,மாதியாட்நின்றதலதருமகர்த்தாவான வருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே............(௱௧)

(அவைபடக்கங்கூறியது.)

பரிமளந்தோயிதழிமாலையொடுமணமிலாப்பச்சிளம்புல்லறுகினை, பழுதென்றுதள்ளாமலீசனுளமகிழ்வொடும்படர்சடையிலேற்றபடியால், விரவுமாசையினுனுணாத்தவிச்சதகமது மிக்கபுன்செல்லாயினு- மேதினியெலாம்புகழிலக்கணமிலக்கியமிகத்தெளிந்தறிநாவலர், பரவுநின்புகழ்தலப்பெருமையின்றுதியிருப் பதனுலிகழ்ந்திடாமற், படியுளநிறைந்தன்பு கொடுபெரிதுவந்தருட் பாலித்துமேற்கொள்ளுவார், அரியயனெடிந்திரன்பூசித்தனேசனே யருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே............(௱௨)

(வாழிகூறியது.)

சந்ததமுமோது நான்மறைவாழியாகந் தளிர்க்கும்பசுக்கள்வாழி, தரணிகாவலர்வாழிமனுநீதிவாழிமுத் தமிழ்வாழிவேள்விதனிலே,வந்தெழுந்தெய்விகமன்னவன்வாழியவன் மதலைமெய்ப்பொருணபனுர் மைந்தர்வழிவந்தவர்கள் வாழிகுகமுனிவாழி மாதவநிறைந்துவாழி, சுந்தரமிகுந்தவுண்ணாமுலைத்தாய்வாழி சோதிப்ப்ரகாசமாகத், தோன்றுமண்ணாமலைப்பரமனூர்வாழிமெய்த் துணைமனோன்மணியும்வாழி; யந்தணர்கள்வாழியெழில்சிங்கபுரிவாழிமெய் யருள்பெறுவசந்தராயர்· ஆதிசந்ததிவாழி நீடுபார்க்கவ கோத்ர மவுனியேன் மிகவாழியே............௱௩

அண்ணாமலைச்சதகம் - முற்றிற்று - முற்றும்.